2017 ஜனவரி 27]

2—

மேம்பாலம்

***3304—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதி, கோயம்புத்தூர், உக்கடம் பேருந்து நிலையம் அருகில் மேம்பாலம் கட்டும் பணியை துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.*

சிங்காநல்லூர் தொகுதி, கோயம்புத்தூர், உக்கடம் பேருந்து நிலையம் அருகில் மேம்பாலம் கட்டுவதற்கு ரூ.121.82 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பாலம் கட்டுவதற்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், உக்கடம் பகுதியினுடைய சந்திப்பில் பொள்ளாச்சியிலிருந்து வரக்கூடிய வாகனங்களும், கேரள மாநிலத்திலிருந்து வந்து கொண்டிருக்கக்கூடிய வாகனங்களும் மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகின்ற வாகனங்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே மேம்பாலம் கட்டப்படும் என்று 2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் 33, 34 ஆம் பக்கங்களில் சொல்லப்பட்டு, மேம்பாலம் கட்டக்கூடிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டது. அந்தப் பணிகள்*

இன்னும் நடைபெறாமல் இருக்கின்றன. உடனடியாக அந்தக் கட்டுமானப் பணிகள் துவங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர், உக்கடம் பேருந்து நிலையம் அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் இடமானது திண்டுக்கல்–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை எண் 280, கிலோ மீட்டர் 157/6–ன் வலதுபுறம் அமையவுள்ளது. 26–8–2015–ல் நில எடுப்பு, மின் கம்பம், குடிநீர்க் குழாய்கள் போன்ற பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றியமைக்கும் பணிக்காக ரூ.88.61 கோடிக்கும், 4–3–2016–ல் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணிக்கு ரூ.121.82 கோடிக்கும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேம்பாலத்தின் வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு சரிபார்க்கும் பணியும் நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தவுடன் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள நாரணபுரம் கிராமத்திலுள்ள ஒரே நீராதாரமானது பிராமண குளம்தான். அந்தக் குளத்தில் தற்சமயம் ஒரு தனியார் நிறுவனம் காற்றாலையை அமைத்துள்ளது. இதைத் தடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே சென்ற வருடம் நவம்பர் மாதம் மாவட்ட ஆட்சியரிடம் ஒரு மனு கொடுத்தேன். மீண்டும் 20–1–2017 அன்று தாசில்தார் அலுவலகத்தில் முன்னாள் விவசாய சங்கத்தோடு இணைந்து இந்தக் காற்றாலையை அகற்ற வேண்டும் என்று தெரிவித்தேன். இது ஒரு நீர்ப்பிடிப்பு உள்ள

2017 ஜனவரி 27]

இடம். ஏற்கெனவே வரலாறு காணாத வறட்சியை நாம் எதிர்கொள்ள வேண்டிய தருணம் இது. அந்த மிகப் பெரிய குளம்தான் அந்த கிராமத்திற்குரிய நீராதாரம். அந்த கிராமத்திற்கு நடுவில் அமைந்திருக்கும் அந்தக் குளத்தில் போய் அவ்வளவு பெரிய ஒரு காற்றாலையை அமைத்து, அந்த ஓடை வழியாக tunnels–ஐ அமைத்து வைத்திருக்கிறார்கள். நான் இதுகுறித்து பல முறை D.R.O., தாசில்தார் போன்ற அனைவரிடமும் பேசிய பிறகும், அந்தக் காற்றாலை அங்கு அகற்றப்படாமல் இருக்கிறது. தயவுசெய்து அந்தக் காற்றாலையை அகற்றுவதற்கு தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியில் பாலம் கட்டுவது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா தொடுத்திருக்கின்றார். ஆனால், துணை வினாவில் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியில் இருக்கின்ற நிலை பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அது மின்சாரத் துறையினுடைய கவனத்திற்கான கேள்வி. இருந்தாலும், நீராதாரத்தைப் பற்றி சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட எங்கள் துறையினுடைய அதிகாரிகளையும், மின்சாரத் துறையினுடைய அதிகாரிகளையும் அனுப்பி ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் Ice House பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே ஒரு மேம்பாலம் கட்டப்படும் என்று ஏற்கெனவே மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மாநகராட்சியால் அறிவிக்கப்பட்டு,

[2017 ஜனவரி 27

அது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த Ice House பகுதியிலே ஒரு மேம்பாலத்தைக் கட்ட முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது மாநகராட்சி என்று சொல்கின்றார். இது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின்கீழ் வருகின்ற பகுதி. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா தொடுத்திருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதையும் ஆய்வு செய்து, அங்கே மேம்பாலம் கட்டுவதற்குண்டான நிலையிருந்தால் கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். போரூர் பாலம் நீண்ட காலமாக நிலுவையில் இருந்தது. அதற்கு நிலம் எடுக்கின்ற பிரச்சினை இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் அதற்கு தீர்வு கண்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் வடபழனி, நெல்சன் மாணிக்கம் சந்திப்பு, கீழ்க்கட்டளை மேம்பாலம், காளியம்மன் கோயில் மேம்பாலம், வேளச்சேரி மேம்பாலம், மேடவாக்கம் மேம்பாலம், பல்லாவரம் மேம்பாலம், கொளத்தூர் ரெட்டேரி மேம்பாலம் பகுதிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டிருக்கின்றன. மற்றொரு பாலம் இப்பொழுது துவங்கப்பட்டு ஒப்பந்த காலத்திற்குள் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எந்தெந்தப் பகுதிகளிலே பாலம் கட்ட வேண்டுமென்று முக்கியத்துவம் இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளிலெல்லாம் அம்மா அவர்களுடைய அரசு முன்னுரிமை கொடுத்து பாலங்களைக் கட்டி வருகின்றது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. உமா மகேஸ்வரி அவர்கள்.

2017 ஜனவரி 27]

திருமதி கு. உமா மகேஸ்வரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும், மக்களை விட்டு மறையாத இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அரசால் விளாத்திகுளம் தொகுதியில் சொல்லில் அடங்காத எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில், தேசிய நெடுஞ்சாலையில் தினமும் அதிக வாகனங்கள் செல்லும் எட்டையபுரம், எப்போதும்வென்றான் குறுக்குச்சாலை, பந்தல்குடி ஆகிய பகுதிகளை தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்க மாண்புமிகு அம்மாவின் வழியின்கீழ் செயல்படும் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலையாக இருந்தால் அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த தேசிய நெடுஞ்சாலை அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள பகுதி என சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அங்கே விபத்தும் ஏற்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பகுதி மத்திய தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியை ஆய்வு செய்து, மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்றுத்தான் அங்கு பாலம் அமைக்க வேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கு பாலம் கட்டுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு அதிகமான பக்தர்கள் கடையநல்லூர், திருநெல்வேலி வழியாகச்*

செல்லக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் செல்லும்பொழுது, இரவு நேரங்களிலே நடந்துசெல்லும்போது அவர்கள் அதிகமான விபத்துகளைச் சந்திக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. பழனிக்குச் செல்லக்கூடிய யாத்ரிகர்களுக்கு தனியாகப் பாதை அமைத்து அவர்களெல்லாம் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது. அதுபோன்று, யாத்ரிகர்களுக்கான ஒரு தனிப் பாதையை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்செந்தூர் செல்கின்ற பக்தர்களுக்கு தனி நடைபாதை அமைக்க வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதனை ஆய்வு செய்து, நிதி நிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர் பேரூராட்சி, தவுட்டுப்பாளையம், பிரம்மதேசம் பிரிவில் தாழ்வாக இருக்கும் பகுதிகளில் மழைக்காலங்களில் நீர் தேங்கி இருக்கின்ற அந்தப் பிரிவில் சிறு பாலம் அமைத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை நிறைவேற்றித் தருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

2017 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதி குறுகலான பாலமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஆகவே அந்தப் பாலத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே வினா தொடுத்திருக்கின்றார்கள். அதனை ஆய்வு செய்து அந்தப் பாலத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இடம் செங்கல்பட்டு, பாலாற்றிலே தொடங்கி, தொழுப்பேடு வரையிலே தேசிய நெடுஞ்சாலையாக இருக்கிறது. இதில் குறிப்பாக, புக்கத்துறை, படாளம், மேலவளம்பேட்டை, அச்சரப்பாக்கம் ஆகிய இடங்களில் மேம்பாலங்கள் இல்லாத காரணத்தினால் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகிலே இருக்கக்கூடிய அய்யனார்கோயில் என்று சொல்லக்கூடிய இடத்தில் இதுவரையில் ஏற்பட்டிருக்கிற விபத்தில் 50–க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கிறார்கள். எனவே, இந்த அரசு அங்கே மேம்பாலம் கட்டி பொதுமக்களுக்கு பாதுகாப்பு ஏற்படுத்த ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் வேண்டுகோளாக வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதிகளில் உள்ள சாலைகள் அத்தனையுமே இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையக் கட்டுப்பாட்டில்*

வருகின்ற சாலை. ஆகவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்தான் அந்தப் பகுதியிலே மேம்பாலம் கட்ட வேண்டும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே விபத்து ஏற்படுகின்ற பகுதிகளையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அங்கெல்லாம் மேம்பாலம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஆகவே, அவர் சுட்டிக்காட்டிய இடங்களில் எல்லாம் மேம்பாலம் கட்டுவதற்குரிய முயற்சியை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.

முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் முன்பே எழுப்பியிருக்கிறேன். விழுப்புரம் நகரத்தில் இரயில்வே மேம்பாலப் பணிகளைப் பொறுத்தவரையில், அப்பணிகளை விரைந்து செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்பொழுதும் தொடர்ந்து சொன்னார்கள். ஆனால் இன்னமும் அந்தப் பணிகள் வேகமில்லாமலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோல திருக்கோவிலூரிலிருந்து விழுப்புரம் வருகிற சாலையில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் ஒரு பை—பாஸ் வேண்டும் என்றும் சொல்லியிருந்தேன். அந்தப் பணியையும் மாண்புமிகு அமைச்சர் செய்வதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அந்தத் தொகுதியினுடைய அமைச்சர் அவர்களும் இருக்கிறார். அவர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுப் பேசி, தயவு செய்து இந்த இரண்டு பணிகளையும் அருள்கூர்ந்து உடனடியாக செய்து தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த

2017 ஜனவரி 27]

இரயில்வே பாலத்தைப் பற்றி சொன்னார்கள். அந்தப் பணி சம்பந்தமாக ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைந்து துவங்கப்பட்டு, பணிகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

துணை மின் நிலையம்

***2531—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மேல்மலை பகுதியிலுள்ள பூம்பாறையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை இந்த உலகிற்கு அடையாளம் காட்டி, இன்றையதினம் இல்லையென்றாலும்கூட எங்கள் இதயத்தில் எங்கள் குடும்ப தெய்வமாக இருக்கின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதிக்குட்பட்ட பூம்பாறை பகுதிக்கு கொடைக்கானல் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், பூம்பாறை பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.